இயல்:2

# அலுவலகக் கடிதங்கள்

அலுவலகங்களுக்குப் பொதுமக்கள் அனுப்பும் கடிதங்கள் மக்களாட்சி முறையில் சிறந்த இடம் வகிக்கின்றன. பொதுமக்களுக்கு உள்ள குறைகள் எண்ணற்றவை. தனிப்பட்ட முறையிலும் பொதுவான முறையிலும் தங்களுக்கு ஏற்பட்டுள்ள குறைகளை எடுத்துக் கூறி அவற்றைக் களையும் வகையில் உதவி செய்யுமாறு கேட்டு அரசு அலுவலகங்களுக்குப் பொதுமக்களின் கடிதங்கள் வருகின்றன.

மாவட்ட ஆட்சியர்கள் திங்கட்கிழமை தோறும் பொதுமக்களைச் சந்திக்க நேரம் ஒதுக்குகின்றனர். எழுத்தறிவில்லாத எளிய மக்கள், ஆதரவற்றவர்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழே உழல்பவர்கள், அரசு அளிக்கின்ற பலவிதமான சலுகைகள் அறியாதவர்கள் என்று நூற்றுக்கணக்கான மக்கள் இவ்வாறு மாவட்ட ஆட்சியரைச் சந்திக்க முறைப்படியான வாய்ப்பும் வசதியும் உண்டு. கோட்டாட்சியர், வட்டாட்சியர் முதலியோரும் திங்கட்கிழமை தோறும் பொதுமக்களைச் சந்தித்து விண்ணப்பங்கள் பெற்று மக்களின் குறைகளைப் போக்கிட நடவடிக்கை எடுக்கிறார்கள்.

மாநில அளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெற்று அவர்களின் குறைகளைக் களைய முற்பட்டுள்ளார்.

பொதுவாக மனுக்கள் பின்கண்ட கோரிக்கைகள் பற்றி அதிக அளவில் வருகின்றன.



1) முதியோர் ஓய்வூதியம் கேட்டு.
2) விதவையர் ஓய்வூதியம் வேண்டி.
3) வேலை செய்ய இயலாத முதிர்ந்த வேளாண்மை ஊழியர்க்கான உதவித் தொகை நாடி.
4) கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்கல்
5) கிணறு வெட்டக் கடன் வேண்டி.
6) உடல் ஊனமுற்றோருக்கு உதவித் தொகை கேட்டு.
7) செங்கல் சூளைக்கு அனுமதி கோரி.
8) தையல் இயந்திரம் கேட்டு.
9) புறம்போக்கு நிலத்தில் குடியிருப்புமனை ஒதுக்க வேண்டி.
10) புறம்போக்கு நிலத்தில் ஒரு பகுதியை உழவு செய்யப் பட்டா அளிக்கக் கேட்டு.
11) உணவு வழங்கு அட்டை கேட்டு.
12) கிராமப்புறங்களுக்குப் பேருந்து வழி ஏற்படுத்தக்கோரி.(அல்லது) ஏற்கனவே உள்ள வசதியைப் பெருக்கக் கோரி.
13) அனாதைப் பெண்கள் திருமணம்.
14) நில உரிமை மாற்றம் (பட்டா மாற்றம்)
15) ஏரிக் கால்வாய்களைப் பழுது பார்த்தல்.
16) விதவையின் குழந்தைகளுக்குப் பாடநூல்கள் இலவசமாக வழங்கல்
17) நலிந்த பிரிவினருக்கு மேம்பாட்டுத் திட்டங்கள்.
18) உழவு மாடுகள் கேட்டு.
19) வண்டியும் மாடுகளும் கேட்டு.
20) கோழிப்பண்ணைவைக்க உதவி கேட்டு.
21) பட்டு அல்லது மீன் உற்பத்திக்கு உதவி கேட்டு.

இங்ஙனம் அளிக்கப் பெறும் கடிதங்களும், அஞ்சல் மூலம் அனுப்பும் கடிதங்களும் வட்டாட்சியர் அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகம் -மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகியவற்றினின்று உரிய வெவ்வேறு அலுவலகங்களுக்குப் பிரித்தனுப்பப் அம்மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. சில கோரிக்கைகள் உடனடியாக நிறைவேறுகின்றன. சில கடிதங்களின் மீது உடனே செயல் நிறைவேற்றம் செய்ய முடியலாம். சில விண்ணப்பங்கள் முறையானவை அல்ல என்று ஏற்கப்படாமல் போகலாம். வேறு சில விண்ணப்பங்களைத் தலைமைச் செயலகத்துக்கு அனுப்பி ஆணை வழங்குமாறு ஏற்பாடு செய்யவேண்டிவரும். ஆக, விண்ணப்பத்தின் தகுதியைப் பொருத்து, அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கின்றனர். மெதுவாகவோ விரைவாகவோ அரசு இயந்திரம் பொதுமக்களின் குறைகளைப் போக்க முயல்கின்றது என்பது உண்மை.

இவ்வாறு அலுவலகங்கட்குப் பொதுமக்கள் அனுப்பும் கடிதங்கள் ஏராளம், ஏராளம்! எளிய, பாமர மக்களுக்கு மட்டுந்தான் குறைகள் உண்டா? மாணவர்களுக்கு இல்லையா? அரசு பணியில் உள்ளவர்களுக்கு இல்லையா? தனியார் நிறுவனங்களில் உள்ளவர்களுக்கும் உண்டே!

மாணவர்களும் சந்திக்கின்ற சிக்கல்கள் மிகப்பல. பல்கலைக்கழகத்தை நாடவேண்டிய பல கட்டாயங்கள் உள்ளன. தேர்வுக்கட்டணம் கட்டியும் நுழைவுச் சீட்டு வராமை! தேர்வு எழுதியும் தேர்வு முடிவு வராமை! பட்ட வகுப்பில் தேர்வு பெற்றதற்கான சான்று வழங்காமை. மதிப்பெண் தாள்கள் காணாமல் போனமை. என்று பலவற்றை ஒட்டிக் கடிதங்கள் எழுத வேண்டியுள்ளது.

அஞ்சல்வழிக் கல்வி மாணவர்களின் சிக்கல்கள் இன்னும் மிகுதி! கட்டணம் செலுத்தியமை, தேர்வுக் கட்டணம் கட்டியமை, அடையாளச் சான்று பெறாமை, பாடநூல்கள் பெறாமை, தேர்வு விண்ணப்பம் வராமை, தேர்வு பற்றிய அறிவிப்பு வராமை, தேர்வு மையம் மாற்றம், பயிற்றுமொழி மாற்றம், மாற்றுச் சான்றிதழ் வழங்கல் என்பன பற்றி அவர்கள் அஞ்சல்வழிக் கல்வி மையத்திடம் அடிக்கடி தொடர்புகொள்ள வேண்டியவர்கள் ஆவர்.

## அலுவலகத் தமிழ் நடை

தமிழ், பன்முகம் கொண்ட வைரம்! கவிதை, கதை, நாடகம், கட்டுரை, அறிவியல், இதழியல் முதலிய துறைகளில் வழங்கும் தமிழ்நடை, துறைதோறும் துறைதோறும் தனித் தனி அடையாளத்துடன் விளங்கிடுவதாகும். படைப்பிலக்கியத்தில் பயன்படும் தமிழ்நடை வேறு. அலுவலகத் தமிழ் நடை வேறு. கடந்த ஐம்பது ஆண்டுகளில் தமிழ் பெற்றுள்ள வளர்ச்சி, நம்மை வியப்பில் ஆழ்த்தும். அதே போல் அலுவல்முறைத் தமிழ், தனித்தன்மை வாய்ந்ததாக வளர்ந்து தனி அடையாளம் கொண்டுவிட்டது. தனிவகை ஆட்சிச் சொற்களைக் கொண்டுவிட்டது. தமிழ்வாணர்கள் இத்தகு கடிதங்களை எழுதும் புலமை பெற்றிடவேண்டும்.

கவிஞர்களின் உலகில் நடமாடும் தமிழ், சொல் வளம் மிக்கது. கற்பனை மிக்கது. பொருளணியும் சொல்லணியும் பயின்றது. உள்ளுறையும் இழைந்தது. படிமங்களும், குறியீடுகளும், இருண்மையும் கொண்டது. பலவேறு உத்திகள் தகைந்தது ஆனால், ஆட்சிமொழி எனும் முறையில் தமிழ் பூண்டுள்ள வடிவம் முற்றிலும் வேறுபட்டது.



தமிழிலே பட்டங்கள் பெற்றவர்கள் ஒவ்வொருவரும் ஆட்சிமொழியாகத் தமிழை எளிதில் கையாள முடியாது. புலமை வேறு! ஆட்சி மொழி வேறு! ஆட்சிமொழியாகத் தமிழை மேற்கொண்டு விண்ணப்பங்கள் ஆயத்தஞ் செய்வது தனிக்கலை.

தமிழ் ஆட்சிமொழியாக இருப்பினும், ஆங்கிலத்தில் விண்ணப்பங்கள் அனுப்பும் நைப்பாசை சிலருக்கு உண்டு தப்புந் தவறுமாக ஆங்கிலத்தில் எழுதியனுப்பும் விண்ணப்பங்களையும் கடிதங்களையும் இன்றும் காணலாம். ஆங்கிலத்தில் எழுதினால்தான் அலுவலர்களின் கவனத்தைப் பெறலாம் என்பது தவறான எண்ணம். மாறாக எளிய தமிழில் விண்ணப்பங்களையும் கடிதங்களையும் அலுவலர்கள் வரவேற்கும் போக்கு வளர்ந்து வருகிறது.

## தனி நடை

பொதுமக்களின் குறைகள் பற்றி எழுதுகின்ற கடிதங்களின் நடை எப்படி அமையவேண்டும்?

(1) படைப்பிலக்கிய நடையில் காணலாகும் கற்பனைகளுக்கு இடம் இல்லை. குறியீடு, படிமம், இருண்மை, அணிநலம் முதலியவற்றிற்கு வாய்ப்பில்லை.
(2) எளிமையே உயிர்நாடி.
(3) குறைகளை எளிய சொற்களில் எடுத்துக்கூறி நிவாரணம் என்ன வேண்டும் என்பதைத் தருக்க ரீதியாகக் குறிப்பிட வேண்டும்.
(4) குறைகளைக் களையும் நோக்கமே தலைமையானது
(5) அடக்கம்-அதே போது உரிமையை நிலை நிறுத்தும் பண்பு என இரண்டும் புலப்படுமாறு வாசகங்கள் அமையவேண்டும்.
(6) கடிதங்களுடன் உரிய சான்றுகள்- வருமானச் சான்று, சாதிச் சான்று, பிறப்புச் சான்று, இறப்புச் சான்று, மருத்துவச்சான்று முதலியவற்றையும் இணைக்கவேண்டும். அந்த அலுவலகத்துடன் குறிப்பிட்ட பொருள் பற்றி ஏற்கெனவே நடந்த கடிதப் போக்குவரத்துப் பற்றிய தகவல்கள் தேவை.
குறிப்பிட்ட சிக்கல் பற்றிய ஆவணங்கள் அனைத்தையும் கடிதத்தில் குறிப்பிடவேண்டும்.

கடித அமைப்பு

அலுவலகங்கட்கு விடுக்கும் கடிதங்கள் பின்கண்ட படிவங்களில் அமைய வேண்டும்.

(1) விடுநர் பெயர், தகப்பனார் பெயர், முழுமையான முகவரி.

(2) பெறுநரின் அலுவலகப் பெயர், அலுவலகம், முழு முகவரி.

(3) இவ்விரண்டும் எழுதிய பின்பு "ஐயா", "அன்புடையீர்" என்பன போன்ற விளி வாசகம் அமையவேண்டும்.

(4) பொருள் என்ற தலைப்பில் மனுவின் பொருள் யாது என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடவேண்டும். குறை என்ன? சிக்கல் என்ன? விண்ணப்பதாரர் கேட்கும் நிவாரணம் என்ன? நிவாரணம் பெறுவதில் ஏற்பட்ட தடைகள் என்ன?

இவற்றை மிக மிகச் சுருக்கமாகக் குறிப்பிடவேண்டும். பொருள் என்ன என்பதைப் பார்த்த அளவிலேயே--

1) எந்த அலுவலர் கவனிக்கவேண்டும்?

2) எந்த அலுவலகத்துக்கு அனுப்பவேண்டும்?-- ஆகியவை விளங்கிவிடும். விரைந்து செயற்பட ஏதுவாகும்.

(5) பார்வை என்று தனிப்பத்தி ஒன்று அமைத்திட வேண்டும். மனுவின் பொருள்பற்றி ஏற்கெனவே உள்ள அரசாணைகள், அரசு அறிவிப்புகள், துறைத் தலைவர்களின் செயல்முறைகள், முந்தைய கடிதங்கள், விளம்பரங்கள், தகவல்கள் ஆகியவற்றை வரிசையாகக் குறிப்பிட வேண்டும். கடிதத்தின் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்குரிய தகவல்கள் அனைத்தையும் "பார்வை" என்ற பகுதியில்- இயன்ற அளவில் குறிக்கவேண்டும்.

(6) இனிக் கடிதம் தொடங்க வேண்டும். முதற்கண், குறைகளைக் குறிப்பிடவேண்டும். குறைகள் பற்றிய விவரங்கள் ஒரே பத்தியில்-- சிலபோது பல பத்திகளாக-- அமையலாம். எத்தகு வரையறையும் வகுக்க இயலாது. அடுத்ததாக, விண்ணப்பிப்பவர் என்ன வகையான நிவாரணத்தை வேண்டுகிறார் என்பதையும் அது எந்தெந்தச் சட்டம் அல்லது அரசாணை அல்லது விதியின்கீழ் அளிக்கத் தக்கது என்பதையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

(7) கடிதத்தை முடித்தல் - இனிய முறையில் கடிதத்தை எழுதி நன்றி என்ற தொடருடன் முடிக்கவேண்டும்.



(8) கையொப்பம். 'தங்கள் உண்மையுள்ள' என்று எழுதி அதன்கீழ்க் கையொப்பம் இடல்.

(9) கையெழுத்துக்கு நேராக இடப்புறம், ஊரின் பெயரும், நாளும் குறித்தல்.

(10) இணைப்புகள் விவரம் - கடிதத்தின் கருத்தையும் கோரிக்கையை வலியுறுத்தும் வகையிலும் உள்ள ஆவணங்களின் படிகள். இதே போன்ற சலுகை முன்பு வழங்கப்பட்டிருந்தால் அதற்குரிய அரசு அதிகாரிகளின் செயல்முறைகள், அரசாணைகளின் படிகள், முந்தைய கடிதங்களின் படிகள், வேறு ஆதாரங்களின் படிகள் முதலியவற்றை இணைத்துள்ளமை பற்றிக் குறிப்பிட வேண்டும். கோரிக்கையை உடனே நிறைவேற்றிட உதவுகின்ற ஆவணங்களை அலுவலர்கள் தேடித் தேடி அலுத்துப்போவதுண்டு. இந்தச் சங்கடத்தைப் போக்கும் முறையில், நாம் ஆவணங்களின் உண்மைப் படிகளை இணைக்கவேண்டும்.

(11) மனுக்களின் படிகள், வேறு துறையின் அலுவலங்களுக்கோ மேலதிகாரிக்ளுக்கோ அனுப்பப்படின், அவ்விவரங்களை இறுதியில் வரிசையாக குறிக்கவேண்டும்.

இனி, மாதிரிக் கடிதம் ஒன்றைக் காண்போம்.

### மாதிரிக் கடிதம் - 1

விடுநர் :-
தா. கண்ணன்
த.பெ. ஆ. தாமோதரன்
27, இரண்டாவது தெரு,
வ.உ.சி.நகர். காவேரிப்பட்டினம்,
தருமபுரி மாவட்டம்.

பெறுநர் :-
மாவட்ட ஆட்சியர் அவர்கள்
தருமபுரி மாவட்டம்,
தருமபுரி--1

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் :-தருமபுரி மாவட்டம், கிருட்டிணகிரி வட்டம் - காவேரிப்பட்டினம் -- புறம்போக்கு நிலத்தில் வீடு கட்ட, பட்டா வழங்குதல்-- குறித்து

1) கிருட்டிணகிரி வட்டாட்சியரின் கடிதம்
ந.க.எண் 175-91- 14.3.92 நாளிட்டது.

2) தங்களுக்கு நான் அனுப்பிய விண்ணப்பம்
1.3.92 நாளிட்டது.

நான் உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழை உழவன். படிப்பறிவு அற்றவன். எனக்குச் சொந்தமாக நிலபுலன்கள் இல்லை. சொந்த வீடும் இல்லை. மனையும் இல்லை. கூலி வேலை செய்தே பிழைப்பவன் நான்.

ஒண்டுவதற்குக் குடிசையாவது வேண்டும் என்பதால், காவேரிப் பட்டினத்தில், ஆற்றோரம் தெற்கே புறம்போக்காக இருந்த இடத்தில் நான் குடிசை ஒன்றைப் போட்டுக்கொண்டு கடந்த நான்கைந்தாண்டுகளாக வாழ்ந்து வருகிறேன். என்னுடைய பெற்றோருடனும், மனைவியுடனும், இரண்டு குழந்தைகளுடனும் நான் அந்தச் சிறிய குடிசையில் வாழ்ந்து வருகிறேன்.

இப்புறம்போக்கு நிலம், பயிர் செய்வதற்கு ஏற்றதன்று. பாசன வசதியும் இல்லை, மண்ணும் களர் மண். எனவே இது உழவு வேலைக்கு ஏற்றதல்ல இந்தப் புறம்போக்கு நிலத்தில் நான் பட்டா பெற்றால் நிம்மதியாக இருக்கமுடியும். நான் தற்போது குடிசை போட்டுள்ள இடம் நில அளவை எண்.37-1981 உட்பிரிவு எண் 3-16 ஆகும். ஐந்து செண்ட் பரப்புடையது. நான் வசிக்கும் இந்தக் குடிசைக்கு வரியைப் பேருராட்சிக்கு முறையாகச் செலுத்தி வருகிறேன். அதற்கான சான்றுகளை இணைந்துள்ளேன்.

எனவே தாங்கள் மேலே குறிப்பிட்ட புறம்போக்கு நிலத்தில் எனக்கு ஐந்து செண்ட் ஒதுக்கி, உரிய சான்று ஆவணங்களை வழங்கியுதவ வேண்டுகிறேன்.

ஏழையின் வாழ்வில் ஒளியேற்றக் கேட்டுக் கொள்கிறேன்.

காவேரிப்பட்டினம்
14.4.92

தங்கள் உண்மையுள்ள
தா. கண்ணன்.

படி ஒன்று கிருட்டிணகிரி வட்டாட்சியருக்குப் பணிந்தனுப்பலாகின்றது.
படி ஒன்று, கிருட்டிணகிரி கோட்டாட்சியருக்குப் பணிந்தனுப்பப்பலாகின்றது.

இணைப்பு :-

கடந்த ஐந்தாண்டுகளாக நான், என் குடிசைக்கான வரி கட்டியமைக்குப் பேருராட்சி அளித்துள்ள பற்றுச் சீட்டுகளின் படிகள்- ஐந்து



## மாதிரிக்கடிதம்-2

(மின்வாரிய அலுவலகப் பணியில் குறைகள்).

விடுநர் :
பா. முரளி,
13, பெருமாள் கோவில் தெரு,
சேலம் -2

பெறுநர் :
செயற்பொறியாளர் அவர்கள்,
தமிழ்நாடு மின்வாரியம்,
சேலம் -1

ஐயா,

பொருள் : மின்கட்டணம் செலுத்தல் - பொன்னம்மா பேட்டை அலுவலகம்- வசூலிப்பவர் இன்மை குறித்து.

நான் கடந்த 3.3.92 அன்று என் வீட்டின் மின் கட்டணம் கட்டுவதற்குப் பொன்னம்மாபேட்டை மின்சார அலுவலகத்திற்குச் சென்றேன். அலுவலகம் திறந்திருந்தது. ஆனால் கட்டண வசூல் அலுவலர் வரவில்லை. பிறகு கட்டணம் செலுத்தலாம் என்று திரும்புகிறபோது, அங்குள்ள வேறு அலுவலர்களை விசாரித்தபோது, வசூல் குறைவாக உள்ளதால் வசூல் அலுவலர்கள் தாமதமாக வருவார்கள் என்று அறிந்தேன். கட்டணம் பெற்றுக்கொள்ள யாருமில்லா நிலையில், என்னைப் போன்றே பலரும் பொறுமையிழந்து காத்துக் கிடக்க வேண்டியுள்ளது.

குறிப்பிட்ட நேரப்படி வசூல் பணிகளை நிறைவேற்றும் படியானஏற்பாடுகளைப் பொன்னம்மா பேட்டை மின் அலுவலகத்தில் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சேலம்
5.3.92

தங்கள் உண்மையுள்ள
பா. முரளி

## மாதிரிக் கடிதம்-3

(போக்குவரத்து ஏற்பாட்டில் குறை)

விடுநர் :
கா. பழநிக்குமரன்
செயலர்,
சங்ககிரி மக்கள் நல்வாழ்வு மன்றம்
21, கடைவீதி,
சங்ககிரி

பெறுநர்:
மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
சேலம் மாவட்டம்,
சேலம்.1

அன்புடையீர்
வணக்கம்

எம் ஊரான சங்ககிரி, சேலம் மாவட்டத்தில் உள்ள வட்டத் தலைநகராகும். தேசிய நெடுஞ்சாலையில் உள்ள நகரம் இது. நெடுஞ்சாலை ஒட்டியே பேருந்து நிலையம் உள்ளது. சென்னை, கோவை, சேலம், கேரளம் ஆகிய பகுதிகளுக்கு இவ்வூர் வழியாக ஏராளமான வாகனங்கள் எந்நேரமும் சென்றபடி உள்ளன.

பேருந்துகளுக்கான நிலையத்திற்குள் அவை வராமல் நெடுஞ் சாலையில் நின்று விடுகின்றன. மக்கள் பேருந்திலிருந்து இறங்குவதும், ஏறுவதும் நெடுஞசாலையில்தான். எதிர் எதிர் பக்கங்களில் பேருந்துகள் நின்று பயணிகளை ஏற்றி இறக்குவது அன்றாடம் நடைபெறுகின்றது. அந்த நேரத்தில், சாலையில் இடைவெளி இல்லாமல், பிற வாகனங்கள் நகரமுடியமால் சாலையை அடைத்து விடுகின்றன. போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு வருகின்றது

இம்மாட்டோ! பேருந்துகள் நெடுஞ்சாலையில் நின்று பயணிகளை இறக்கி ஏற்றுகின்றபோது பேருந்துகளைச் சுற்றி வெள்ளரிக்காய், பழம், சோடா என்று பல்வகைப் பண்டங்களை விற்கிறவர்கள் சூழ்ந்து கொண்டு சாலையைச் சந்தைக் கடையாக்கி விடுகிறார்கள், நெரிசல், நெரிசல்! இதனால் விபத்துக்களும் நடக்கின்றன.

எனவே மாவட்ட ஆட்சியர், உரிய ஆணை வழங்கி இந்நெருக்கடியைத் தீர்க்கவேண்டுமென்று எம் மன்றத்தில் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். பேருந்துகள் பேருந்து நிலையத்திற்குக் கட்டாயம் செல்ல வேண்டும். அங்கேதான் பயணிகளை இறக்கவும் ஏற்றவும் முற்பட வேண்டும் என்ற ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

சங்ககிரி
16.3.92

தங்கள் உண்மையுள்ள
கா. பழநிக்குமரன்
செயலர்.

படி ஒன்று
மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் அவர்களுக்குப் பணிந்தனுப்பலாகின்றது



படி ஒன்று
சேலம் வட்டாரப் போக்குவரத்து அலுவர் அவர்களுக்குப் பணிந்தனுப்பலாகின்றது.

படி ஒன்று
சங்ககிரி காவல்துறை ஆய்வாளர் அவர்களுக்குப் பணிந்தனுப்பலாகின்றது.

## மாதிரிக் கடிதம் - 4

(பெண்களுக்குத் தனி இருக்கைகள் ஒதுக்கல்)

விடுநர்
எஸ். பத்மாவதி. பி.ஏ.,
அமைப்பாளர்,
மகளிர் சங்கம், தூசி மாமண்டூர்

பெறுநர்
மேலாண்மை இயக்குநர் அவர்கள்,
அரசு போக்குவரத்துக் கழகம்,
காஞ்சிபுரம்-1

ஐயா,

பொருள்: *புறநகர்த் தடங்களில் பெண்களுக்கான தனி இருக்கைகள் இல்லாமையால் சங்கடங்கள்-- இடம் ஒதுக்குமாறு வேண்டுகோள்*

புறநகர்ப் பேருந்துக்களில் பெண்களுக்கு என ஒதுக்கப்பட்ட இருக்கைகள், பெண்களுக்கு மறுக்கப்படுவது பற்றி எம் சங்கம் தன் ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றது.

சென்னைப் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் அவ்விருக்கைகளைக் காலிசெய்து பெண்களுக்குத் தருமாறு நடத்துநர்கள் ஆடவர்களுக்குச் சொல்கின்றனர். ஆனால் வெளியூர்ப் பேருந்துகளில் இந்த நியதி இல்லை. பெண்கள் மட்டும் அமர்வதற்கு என்று தனி இருக்கைகள் ஒதுக்கப்படவில்லை. மகளிர் ஏறுவதற்கு முன்பு அவர்களை ஒதுக்கித் தள்ளியும் முட்டிமோதியும் பேருந்துகளில் தாவி ஏறிவிட்ட ஆடவர்கள், பெண்களுக்கான இருக்கை என்று குறிக்கப்பட்ட இடங்களையும் பிடித்துக் கொள்கின்றனர்.

பின்னால், பல்வேறு துன்பங்களுக்கிடையே ஏறுகின்ற பெண்கள் அனைவரும் நின்றுகொண்டுதான் பயணம் செய்ய வேண்டியுள்ளது. தங்கள் நிறுவனம் இக்குறையைப் போக்கவேண்டும். பெண்களுக்கு என்று 20 இருக்கைகள் ஒதுக்க வேண்டும். பெண் பயணிகள் எண்ணிக்கை குறைவாக உள்ள போது, பெண்களுக்கான இருக்கைகளில் ஆடவர்

அமரட்டும். வழியில், பெண்கள் பேருந்தில் ஏறினால், அவ்விருக்கைகளைக் காலி செய்து பெண்களுக்கு விட வேண்டும். இவ்விதியை உங்கள் நிறுவன நடத்துநர்கள் செயற்படுத்த ஆணை வழங்குமாறு வேண்டுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள
எஸ். பத்மாவதி.

தூசி
12.4.92

## மாதிரிக் கடிதம்: 5

(நகராட்சி செய்ய வேண்டியன)

விடுநர் :
கா.செ. இளவரசு,
தலைவர்,
வரி கொடுப்போர் சங்கம்,
திருப்பத்தூர்-1

பெறுநர் :
ஆணையர் அவர்கள்,
திருப்பத்தூர்
திருப்பத்தூர்-1

ஐயா,

பொருள்: திருப்பத்தூர் நகர்விரிவு -சாலை- பழுதுபார்த்தல் - குடிநீர் வழங்கல் -தொடர்பாக

தங்கள் நகராட்சி அலுவலர்கள் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டு வீட்டுவரி வசூல், தண்ணீர் கட்டண வசூல் முதலியவற்றில் நிலுவை வைக்காமல் கடமை ஆற்றுவது குறித்து மிக்க மகிழ்ச்சியும் பாராட்டும் தெரிவிக்கின்றோம் ஆனால் நகராட்சி, வரிகட்டுவோருக்கு அது ஆற்ற வேண்டிய கடமைகளை மறந்துவிட்டதுதான் வருத்தமாக உள்ளது.

திரு.வி.க சாலையில் ஜல்லி கொட்டி இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும் சாலைப் புதுப்பிப்புப் பணி முடங்கியே உள்ளது. இதனால் பொதுமக்களின் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறு ஏற்படுகிறது. பல முறை நாங்கள் உங்களிடம் நேரிலும் சொல்லியுள்ளோம்.

பாலாற்றில் பெருவெள்ளம் பெருக்கெடுத்து ஓடிய சில நாட்களைத் தவிர பிறநாட்களில் திரு.வி.க. சாலையில் உள்ள வீட்டுக் குழாய்களில் நீர் வருவதே இல்லை. அக்கம்பக்கத்துத் தெருக்களில் மணிக்கணக்காய் நீர் வருகின்றது. ஆனால், எம் பகுதிக்குக் குடம் அளவும் நீர் வருவதில்லை. இக்குறையை நேரிலும் தொலைபேசியிலும் பலமுறை தெரிவித்துள்ளோம். ஆனாலும் பலன் ஏதும் இல்லை.



எனவே ஆணையர் அவர்கள், இப்பிரச்சினைகள் பற்றித் தம் தனிக்கவனம் செலுத்தி உடன் குறை தீர்க்குமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள,
கா.செ.இளவரசு

திருப்பத்தூர்
21-3-93

## மாதிரிக் கடிதம்: 6

(புதுத் தடங்களில் நகரப் பேருந்துக்கள் விடல்)

**இளைஞர் நல்வாழ்வுச் சங்கம்**

வி.புருடோத்தமன்
அமைப்பாளர்,
இளைஞர் நல்வாழ்வுச் சங்கம்,
பழைய காட்பாடி.

பெறுநர் :
மாவட்ட ஆட்சியர் அவர்கள்
வ.ஆ.அம்பேத்கர் மாவட்டம்
வேலூர் 1.

ஐயா,

பொருள்:- வேலூரில் புதிய பேருந்து தடங்கள்-- கிழக்கும், மேற்கும்-- சத்துவாச்சாரிப் பகுதிக்குக் காட்பாடியிலிருந்தும் விரிஞ்சிபுரத்திலிருந்தும் அதிக அளவில் பேருந்துகள் தேவை- குறித்து.

வேலூரை மையமாக வைத்து வடக்கும் தெற்குமாக நகரப் பேருந்துகள் காட்பாடிக்கும்-பாகாயத்திற்கும் ஏராளமாக உள்ளன. ஆனால் வேலூருக்கு மேற்கே உள்ள பகுதிகளையும் கிழக்கே உள்ள பகுதிகளையும் இணைக்கும் பேருந்துகள் இல்லை. மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சத்துவாச்சாரிக்கு மாறிய பின்னர் இச்சிக்கல் பெருகிவிட்டது. வேலூரை மையமாகக் கொண்டு கிழக்கே ஆற்காட்டிலிருந்து மேற்கே விரிஞ்சிபுரம் வரையும் நகரப் பேருந்து வசதி தேவை. மேற்கே உள்ள அப்துல்லாபுரம், வெட்டுவாணம் முதலிய ஊர்களிலிருந்து சத்துவாச்சாரிக்கு வர வேண்டியவர்கள் ஏராளமானவர் உள்ளனர். எனவே நகரப் பேருந்துகள் பலவற்றைப் புதுத்தடங்களில் பின்கண்டவாறு இயக்கினால், மக்களுக்கு மிகப்பல நன்மைகள் ஏற்படும். குறிப்பாகத் தங்கள் அலுவலகம் வரவேண்டிய பொதுமக்களுக்கு வசதிகள் ஏற்படும். வேலூரிலும் நெரிசல் குறையும்.

1 காட்பாடி-சத்துவாச்சாரி:- காட்பாடி-சத்துவாச்சாரித் தடத்தில் அரை மணிக்கு ஒரு முறை என நான்கு பேருந்துகள் புதிதாக விடவேண்டும். இதனால் காட்பாடிக்கு அருகே உள்ள கிராமத்து மக்களும், கழிஞ்சூர் மக்களும், காங்கேய நல்லூர் மக்களும், காந்திநகர், விருதம்பட்டு மக்களும் வேலூரில் இறங்க வேண்டாமல்-- பேருந்து மாறாமல் சத்துவாச்சாரியில் உள்ள தங்கள் அலுவலகம் நேரடியாக வரலாம்.

2 விரிஞ்சிபுரம்--சத்துவாச்சாரித் தடம்:- இதில் இரண்டு பேருந்துகளை அரை மணிக்கு ஒரு பேருந்து என இயக்கினால், வேலூரை மையமாகக் கொண்டு கிழக்கையும், மேற்கையும் இணைக்க வாய்ப்பு உண்டாகும். இப்பகுதி மக்களுக்கும் வசதிகள் பெருகும். நகரப் பேருந்து நிலையத்திற்குள் செல்ல வேண்டிய அவசியம் இல்லாமல், புறச்சாலை வழியாகவே, சத்துவாச்சாரியை அடைய முடியும். நகரப் போக்குவரத்திலும் நெரிசல் ஏற்படாது. இந்தப் பேருந்துகளைச் சத்துவாச்சாரி தாண்டி இரத்தினகிரிவரை நீட்டித்தால் ஏராளமானவர்கள் காட்பாடி செல்லவும் விரிஞ்சிபுரம்-கோணவட்டம் செல்லவும் வசதியாக இருக்கும்.

இந்த வசதிகள் பற்றிய கோரிக்கை ஏற்படக் காரணம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கோட்டையிலிருந்து 4 கி.மீ. தொலைவில் உள்ள சத்துவாச்சாரிக்கு மாற்றப்பட்டதே ஆகும்.

எம் கோரிக்கையை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நன்கு கவனித்துப் புதிய தடங்களில் பேருந்துகள் செல்ல உரிய ஏற்பாடுகள் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி! நன்றி!

பழைய காட்பாடி
17-4-92

தங்கள் உண்மையுள்ள
வி.புருடோத்தமன்

படி ஒன்று, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்து நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்குப் பணிந்தனுப்பலாகின்றது.

மாதிரிக் கடிதம் 7

போக்குவரத்து ஏற்பாட்டில் சீர்திருத்தம்

விடுநர் :
சி.பா.வேங்கடராமன், பி.எஸ்.ஸி.,
176, விநாயகர் கோயில் தெரு,
பவானி,



ஈரோடு மாவட்டம்-

பெறுநர் :
மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
பெரியார் மாவட்டம்,
ஈரோடு.

ஐயா,

நம் மாவட்டம் பவானி நகரையும், சேலம் மாவட்டம் குமார பாளையத்தையும் இணைப்பது பழைய காவேரி ஆற்றுப் பாலமாகும். இந்தப் பாலம் மிகவும் குறுகியது. எனினும் அனைத்து வகை வாகனங்களும் இப்பாலத்தின் வழியாகத்தான் செல்ல வேண்டியுள்ளது. எனவே பாலத்திலும், பாலத்தை ஒட்டியும் --போக்குவத்து நெரிசல் நாள்தோறும் மிகுதியாகி வருகின்றது. டிராக்டர்களும் மாற்று வழியில் செல்லாமல் பழைய பாலத்தையே பயன்படுத்துகின்றன. காலை, மாலை வேளைகளில் கனரக வாகனங்கள் பழைய பாலம் வழியாகச் செல்வதைத் தடை விதித்து ஆணையிட வேண்டுகிறேன்.

பள்ளிச் சிறுவர்களுக்கு இத்தகு போக்குவரத்து நெருக்கடி மிகவும் தொல்லையாக உள்ளது. அவர்கள் சாலையைக் கடப்பதற்குப் பெரும்பாடு பட வேண்டியுள்ளது.

மேலும், காலை மாலை வேளைகளில் போக்குவரத்துக் காவல் துறையினரைப் பாலத்திற்கு அருகில் நிறுத்திவைத்து நெரிசலைத் தவிர்க்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இது இப்பகுதி வாழ் மக்களின் நீண்டநாள் கோரிக்கையாகும். இதுபற்றி மாவட்ட ஆட்சியர் உடனே நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்
சி.பா.வேங்கடராமன்

படி ஒன்று,
மாண்பு மிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கட்குப் பணிந்தனுப்ப லாகின்றது.

படி ஒன்று,
தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் அவர்கட்குப் பணிந்தனுப்பலாகின்றது.

படி ஒன்று,
பெரியார் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் அவர்களுக்குப் பணிந்தனுப்பலாகின்றது.

## மாதிரிக் கடிதம் - 8
### பேருந்து வசதி தேவை

விடுநர் :
வே.சண்முகக்கனி
17, பெருமாள் கோவில் தெரு
சாலமேடு, விழுப்புரம் மாவட்டம்.

பெறுநர் :
மேலாண்மை இயக்குநர் அவர்கள்
தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்
விழுப்புரம்.

ஐயா,

தங்கள் கடிதத்தின் பணிமனை விழுப்புரம் பேருந்து நிலையத்திலிருந்து 3.கி.மீ தூரத்தில் உள்ளது. எங்கள் ஊராகிய சாலமேடு, வழுதரெட்டி முதலிய சிற்றூர்களும் புதிதாக உருவாகியுள்ள என்.ஜி.ஏ.காலனி, பெரியார் நகர் முதலிய குடியருப்புப் பகுதிகளும் தொழில் நுட்பக் கல்லூரி, பெண்கள் கலைக் கல்லூரி முதலியவையும் பல தொழிற்கூடங்களும் பணிமனை உள்ள பகுதியை ஒட்டி உள்ளன. ஆனாலும் நகரத்திலிருந்து இப்பகுதிக்குச் செல்லப் போதிய அளவுக்குப் பேருந்துகள் இல்லை.

பேருந்து நிலையத்திற்கும் பணிமனைக்கும் இடையே பெரியார் பேருந்துகள் மிகப் பல வருகின்றன. ஆனால் பயணிகளை ஏற்றிக்கொள்வதில்லை. காரணம், போக்குவரத்து விதிகளாம். மக்கள் நன்மைக்காகத் தானே விதிகள் உள்ளன! பணிமனைக்குத் திரும்பி வரும்போதும் பணிமனையிலிருந்து புறப்படும் போதும் உங்கள் பேருந்துகள் பொதுமக்களை உரிய கட்டணம் வாங்கிக் கொண்டு ஏற்றிச் செல்ல ஆணை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.ஆயிரக் கணக்கான மக்களுக்கு நன்மை தருவதாகத் தங்கள் செயல் அமையும்.

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள
வே.சண்முகக்கனி

## மாதிரிக் கடிதம் - 9
### அஞ்கல்வழிக் கல்வி - குறைகள்

விடுநர் :
செல்வி.கருணாம்பிகை,
பி.லிட், மாணவி,
19, சிவன் கோயில் தெரு, செங்கம்.



பெறுநர் :
தலைமைக் கண்காணிப்பாளர் அவர்கள்
அஞ்சல் வழிக்கல்வித் தேர்வு மையம்
அரசு கலைக்கல்லூரி
திருவண்ணாமலை.

ஐயா,

பொருள் : அஞ்சல் வழிக்கல்வித் தேர்வு - மே 1992 -பி.லிட் - நுழைவுச் சீட்டு வாராமை - தேர்வு எழுத அனுமதி குறித்து.

பார்வை :1. அஞ்கலவழிக் கல்வி இயக்கக் கடிதம் எண்234
2. " " " " " 564
3. " " " " " 753
4. " " " " " 961

நான் அஞ்சல்வழிக் கல்வி நிறுவனத்தின் வழிப் பி.லிட் பயில விரும்பி விண்ணப்பம் அனுப்பியிருந்தேன். விண்ணப்த்துடன் கல்விக் கட்டணம் ரூ600 அனுப்பி இருந்தேன். (பார்வை எண்:- 2) இந்தியன் வங்கி வரைவோலை எண் 279374 - 18-12-92 அதற்கு ஒப்புதல் கடிதம் வந்துள்ளது.

நிறுவனம் தேர்வுக்கட்டணம் விதித்து அனுப்பியபடி நான் 12-3-91 அன்று ரூ 175 செலுத்தியுள்ளேன் (வரைவோலை 73298 - இந்தியன் வங்கி (12-3-91) இதற்கும் பார்வை 3-இல் கண்டபடி என் விண்ணப்பமும் தேர்வுக் கட்டணமும் வரப்பெற்றமைக்கு ஒப்புதல் கடிதம் உள்ளது. (பார்வை எண்-4)

பி. லிட் மாணவி எனும் முறையில் நான் செலுத்த வேண்டிய தொகைகள் அனைத்தையும் செலுத்திவிட்டேன். ஆயினும் தேர்வு மையத்தில் எனக்கு உரிய தேர்வு நுழைவுச்சீட்டு வரவில்லை என்று அறிந்தேன். அதுமட்டுமன்றி அடையாள அட்டையும் வரவில்லை.

பிழை என் மீது ஏதும் இல்லை என்பதை இதனுடன் இணைந்துள்ள ஆவணங்களின் படிகள் மூலம் தெளிவாக அறியலாம். எனவே நடைபெறுகின்ற தேர்வில் நான் கலந்து கொள்ளத் தாங்கள் இசைவு நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தேர்வு எழுத எனக்குத் தகுதியோ, உரிமையோ இல்லை என்று அஞ்சல் வழிக்கல்வி நிறுவனம் முடிவு செய்தால், அந்த முடிவுக்கு நான் கட்டுப்பட்டு, நான் எழுதுந் தேர்வு முடிவை அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம் இரத்து செய்து விடவும் இசைகிறேன்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
ஜே.கருணாம்பிகை

இணைப்பு :

2. அஞ்சல்வழிக் கல்வி நிறுவனக் கடிதங்கள் மூன்றின் ஜெராக்ஸ் படிகள் - 3.

## மாதிரிக் கடிதம் - 10

### சான்றிதழகள் தொலைந்தமை

விடுநர் :
கு.மா.கேசவன், பி.ஏ.,
31-1 விநாயகபுரம்
ஆத்தூர்.

பெறுநர் :
முதல்வர்கள்
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரஜ
வடசென்னிமலை
ஆத்தூர்.

ஐயா,

வணக்கம்

பொருள்:- சான்றிதழ்கள் தொலைந்தமை--மாற்று சான்றிதழ், நடத்தைச் சான்றிதழ்கள் -- மாற்று சான்றிதழ்கள் வழங்க வேண்டுகோள்-- குறித்து

பார்வை:- 1) ஆத்தூர் (சேலம்) காவல்துறை ஆய்வாளரின் அறிக்கை, 24- 12-93 நாளிட்டது.
2) ஆத்தூர் வட்டாட்சியரின் கடிதம், ந.க. எண்23456/ 2-1-94 நாளிட்டது.

நான் 1982-85 கல்வியாண்டுகளில் தங்கட் கல்லூரியில் பி.ஏ. (வரலாறு) வகுப்பில் படித்தேன். என் சுழல் எண் 4321-82 ஆகும். படிப்பை படித்து 1985 சூலைத் திங்களில் மாற்று சான்றிதழ், நடத்தைச் சான்றிதழ் பெற்றுக் கொண்டேன். சென்ற ஆண்டில் நான் மதுரை செல்லும் போது, பேருந்தில் அவற்றைத் தவற விட்டு விட்டேன். பலவிதங்களில் தேடியும் காணவில்லை. இது குறித்து ஆத்தூர்க் காவல் நிலையத்தில் 456/3-11-1993 என்ற எண்ணின் கீழ் முறையீடு செய்துள்ளேன். காவல்துறையினர் முயன்றும், ஆவணங்கள் கிடைக்கவில்லை. அவர்கள் தந்த அறிக்கையின்படி ஆத்தூர் வட்டாட்சியர், "சான்றிதழ்கள் கிடைக்கவில்லை" என்றும், அவற்றிற்குப் பதிலாக இரண்டாம் (டூப்ளிகேட்) மாற்று சான்றிதழும் நன்னடத்தைச் சான்றிதழும் தரலாம்" என்றும் தெரிவித்துள்ளனர். காவல் துறையின் அறிக்கையினையும், வட்டாட்சியர் வழங்கியுள்ள கடிதத்தையும் தங்கள் பார்வைக்கு இணைத்துள்ளேன்.



நான், இரண்டாம் மாற்று சான்றிதழும், நன்னடத்தைச் சான்றிதழும் பெறுவதற்குரிய கட்டணம் செலுத்தி விடுகிறேன். எனக்கு அவற்றை விரைவில் வழங்குமாறு வேண்டுகின்றேன்.

நன்றி!

தங்கள் கீழ்ப்படிந்துள்ள
சு.மா.கேசவன்

இணைப்பு :
1) ஆத்தூர் (சேலம்) காவல்துறை ஆய்வாளரின் அறிக்கை, 24-12-93 நாளிட்டது.
2) ஆத்தூர் வட்டாட்சியரின் கடிதம், ந.க. எண்234567 -2-1-94 நாளிட்டது.

## மாதிரிக் கடிதம் - 11

### குடும்பத்தில் முதல் வட்ட வகுப்பு மாணவர் சலுகை வேண்டல்

விடுநர் :
ஆ.விமலாதேவி
முதலாண்டு தமிழ் இலக்கியம்,
அரசு கலைக்கல்லூரி
செய்யாறு.

பெறுநர் :
முதல்வர்கள்
அரசு கலைக்கல்லூரி
செய்யாறு.

ஐயா,

வணக்கம்,

நான் முதலாண்டு தமிழ் இலக்கிய வகுப்பில் பயில்பவள். என் சுழல் எண் 1231.

நான் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவள். என் குடும்பத்தில் என் தந்தையாரோ, அண்ணன் தம்பிகளோ, அக்கா தங்கைகளோ கல்லூரியில் படித்ததில்லை. நான்தான் முதன் முதலாகப் பட்டப் படிப்பில் சேர்ந்தவள். குடும்பத்தில் பட்டம் பெறக்கூடிய முதல் உறுப்பினர் நான். என் குடும்பத்தில் பட்டதாரிகள் யாரும் இலர் என்பதற்கான சான்றையும் இதனுடன் இணைத்துள்ளேன்.

எனவே அரசு விதிப்படி நான் கட்டவேண்டிய கல்விக் கட்டணம் ரு.280 கட்டுவதிலிருந்து எனககு விலக்களிக்க வேண்டுகிறேன்.

நன்றி!

தங்கள் மாணவி
ஆ.விமலாதேவி

இணைப்பு :
குடும்ப விவரம் பற்றி, கிராம நிர்வாக அலுவலரின் சான்று.

## மாதிரிக் கடிதம்-12

நில உரிமைச் சான்று - தவறாக வழங்கியமை

விடுநர் :
மா.வாசுதேவன்,
த-பெ. மாணிக்கம்,
211, சித்தூர் நெடுஞ்சாலை,
வேலூர்-3.

பெறுநர் :
மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
வேலூர் மாவட்டம்,
வேலூர்-9.

ஐயா,

பொருள் : நில அளவை மேம்பாட்டுத்திட்டம்-மூஞ்சூர்மங்கலம் - தவறாகப் பட்டா வழங்கியமை குறித்து.

பார்வை : நில அளவை துணை இயக்குநரின் கடிதம் எண் ந.க.132-17-91/ 11-3-92 நாளிட்டது.

நான், வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், கணியம்பாடிக் கிராமத்தை சேர்ந்த மூஞ்சூர்மங்கலம் கிராமத்தைச் சேர்ந்தவன். வேலூரில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருகின்றேன். என் குடும்பத்தினருக்குக் காலங்காலமாக உரிமையாக இருப்பது, பிரிவினை மூலம் 2. 30 ஏக்கர் நிலம் (பழைய நில அளவை எண் 43-2) எனக்கு 1976-இல் கிடைத்தது. இதை என் தகப்பனார் தம் பாகப் பிரிவினைப் பத்திரம்-பதிவு எண் 32 1986 என்பதில் வேலூர் சார்நிலைப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்.

நான் உள்ளூரில் தங்காமல் வெளியூரில் பணிசெய்வதால் மூஞ்சூர்ப்பட்டு, வேளாளர் தெருவில் உள்ள கோவிந்தன் என்பவர் மகன் குப்பன் என்பவருக்கு எனக்குரிமையான நிலத்தைக் குத்தகைக்கு விட்டு வைத்திருந்தேன். சென்ற 1991 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நில அளவைப் பணி செய்தவர்கள் பழைய ஆவணங்களை ஆராயமலும் தீர விசாரியாமலும் வாய்மொழியான



கூற்றை முழுமையாக ஏற்றுக்கொண்டு மேற்படி குப்பன் என்பவர் பெயருக்கே நில உரிமை (பட்டா) வழங்கியுள்ள செய்தியறிந்து திடுக்கிட்டேன். போதிய ஆதாரங்களைக் கொண்டு முடிவு செய்யாமல் வெறும் வாய்மொழியை ஏற்று நில உரிமை தருவது எந்த வகையிலும் நியாயம் ஆகாது.

பாகப்பிரிவினை மூலம் எனக்குக் கிடைத்த இந்த நிலத்திற்கு 1977 முதல் நான்தான் நிலவரி முதலியவை செலுத்தி வந்துள்ளேன். எனவே மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆவணங்கள் அத்தனையும் ஆராய்ந்து நில உரிமைச் சான்று என்பெயருக்கு மாற்றித்தர ஆணையிடக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
மா.வாசுதேவன்

வேலூர்
1-5-92

இணைப்பு :

1) எங்கள் குடும்பமாகப் பிரிவினைப் பத்திரத்தின்படி.
2) 1977 முதல் நான் செலுத்தி வருவதற்கான நிலவரிப் பற்றுச் சீட்டுகளின் படிகள் - 15.

## மாதிரிக் கடிதம் 13

(நில உரிமைச் சான்று கேட்டல்)

விடுநர் :
மு. முத்துமாணிக்கம்,
த.பெ.முத்துசாமி நாயக்கர்,
நடுத்தெரு,
பெரிய முத்தூர்,
கிருட்டினகிரி வட்டம்,
தருமபுரி. மாவட்டம்.

பெறுநர் :
மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
திருவண்ணாமலை மாவட்டம்
திருவண்ணாமலை-1.

மதிப்பிற்கும், வணக்கத்திற்கும் உரிய ஐயா,

நான், திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம் அத்திமலைப்பட்டுக் கிராமத்தைச் சேர்ந்த ஏழை உழவன். சொந்த நிலபுலன் ஏதும் எனக்கில்லை. நில அளவை எண் 7-6 உள்ள புறம்போக்கு நிலத்தில்

நான் கடந்த பத்தாண்டுகளாகச் சாகுபடி செய்து வருகிறேன். என் அனுபோகத்தில் உள்ள நிலத்தின் பரப்பு 1.30 ஏக்கராகும். நீர்ப்பாசன வசதி இல்லாத நிலம். கரம்பாக இருந்ததைச் சீர் படுத்திக் கல்லையும் முள்ளையும் அப்புறப்படுத்தி நிலத்தைப் பண்படுத்தியுள்ளேன். எனக்கு மேலே குறிப்பிட்ட நிலந்தான் வாழ்க்கைக்கு ஓரே ஆதாரமாக உள்ளது. இல்லையெனில் வாழ்நாள் முழுவதும் கூலி விவசாயி ஆகத்தான் காலம் கழிக்க வேண்டி வரும்.

எனவே மாவட்ட ஆட்சியர் என் மீது கருணை வைத்தும் நீதிப்படியும் நில அளவை எண் 7-16 உள்ள நிலத்தை என் பெயருக்கு மாற்றித் தந்து நில உரிமை (பட்டா) வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள
முத்து. மாணிக்கம்

பெரியமுத்தூர்
17-3-91

## பொதுமக்களின் தனிப்பட்ட குறைகள்

இந்தியாவின் ஆன்மா, கிராமங்களில் உறைந்து கிடக்கின்றது. கோடி கோடியாகப் பணம் ஒதுக்கித் திட்டங்கள் தீட்டியும் கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படவில்லை. இன்னமும் அறியாமையில் மூழ்கிக் கிடக்கின்றார்கள். எழுத்தறிவற்றவர்கள் 50.65 சதவிகிதம் விழுக்காட்டினர். பெண்களின் நிலையோ பரிதாபம். படிப்பும் இல்லை. கூலி வேலையே கதி. சிறுமிகள் பள்ளிக்குப் போகப் போருளாதார வசதி இல்லை. சுள்ளிகள் பொறுக்கியும், சாணி திரட்டியும், சிறு கூலிக்குக் களை பறித்தும், நாற்று நட்டும் சிறுவட்டத்தில் துன்பக் கேணியில் உழலும் சிறுமிகள் கிராமப் புறங்களில் மிகுதி. இளவயதில் திருமணம் - பதினாறு பதினேழு வயதில் குழந்தைப் பேறு. நோய் நாடி நோய் முதல் நாடி மருத்துவம் பார்த்துக் கொள்ள வாய்ப்பின்மை-உடல் ஊனம்-அனாதை நிலை-இளம் வயதில் விதவைக் கோலம்-சரிந்துபோன குடும்பங்களைக் காக்க ஆதரவு இன்மை-தொழுநோயாளிகளாய் மனவளர்ச்சி குன்றியவர்களாய் வாழ்க்கையை நரகமாக நுகர்பவர்களே கிராமப்புறங்களில் மிகுதி. "என்ன செய்வது! விதி!" என்று நைந்து போகின்றார்களே அம்மக்கள்!

இத்தகு மக்களின் நன்மைக்காக-மேம்பாட்டுக்காகத் தமிழக அரசு வகுத்துள்ள திட்டங்கள் எத்தனை!எத்தனை! ஆனால் இத்திட்டங்கள் உடனடியாக எளிய மக்களை எட்டுவதில்லை.



முதலாவதாக இத்தகு திட்டங்கள் உள்ளன என்பதே அம்மக்களுக்கு தெரிவதில்லை. "நமக்குக் கிடைக்கவா போகின்றது?" என்ற ஏக்கம். கிடைத்தாலும் "வழியில் எத்தனை நந்திகள்!" என்று நொந்து போனவர்கள் இம்மக்கள்

இத்தகு மக்களுக்கு உரிய சலுகைகளை எடுத்துரைத்து அம்மக்களின் சார்பாக விண்ணப்பங்கள் ஆயத்தஞ் செய்து உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தால் வாழ்வில் ஒளிகாணாதவர்களின் ஏக்கந் தீர்க்க இயலும். குறிப்பாக மாவட்ட ஆட்சியர்க்கு விடுக்கும் கடிதங்கள்-விண்ணப்பங்கள் உடனுக்குடனே கவனிக்கப்பட்டு உரிய நிவாரணம் தரப்படுகின்றன.

தமிழ் படித்த இளைஞர்கள், மொழிப்பயன்பாட்டை மெய்ப்பிக்கும் முறையில் ஏழை எளிய மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, நலிந்து போனவர்களுக்காக - உயர் அதிகாரிகளுக்கு மனுக்கள் ஆயத்தஞ் செய்வதைச் சமுதாய அறமாகக் கொள்ள வேண்டும். "படித்த வருக்கத்தினர், படிப்பறிவற்ற வருக்கத்தினருக்குச் செய்யத்க்க - குறைந்த அளவிலான சமூக சேவை இது!" என்பதை உணர வேண்டும். ஏழை எளிய மக்களுக்காக உள்ள அரசு திட்டங்கள் இன்னின்னவை என்பதைச் சுருக்கமாக -அம்மக்களுக்கு விளக்கலாம்.

கைகால் ஊனம் உற்றோர், காது கேளாதோர், ஊமையர், பார்வை இழந்தோர், மன வளர்ச்சி குன்றியோர், தொழுநோயாளியர் ஆகியோர் இனிப் பிச்சையெடுத்துப் பிழைப்பு நடத்த வேண்டியதில்லை! 18 வயதிற்கு மேல் 45 வயதிற்குட்பட்டவர்கள் மானமுடன் பிழைப்பு நடத்த வாய்ப்பாகத் தையல்துறை, மின்னியல் துறை, வணிகவியல் துறைகளில் பயிற்சி பெற தமிழக அரசின் சமூக நலத்துறை ஏற்பாடு செய்கின்றது. இதற்காகத் திங்கள் தோறும் ரூ.100 அளவிற்கு உதவித் தொகையை சமுதாய நலத்துறை வழங்குகின்றது.

மேற்கண்ட நலிந்த பிரிவினர் பயிற்சி பெற்றுச் சுயவேலை வாய்ப்பை நாடுவதாயின் வாழ்க்கையின் புதிய வாசல் திறக்கப்படும். சுயவேலை வாய்ப்புக்காக வங்கிகள் மூலம் கடன் தரப்படும். அரசு மானியமாக ரூ 1000 உண்டு. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். மாற்றுச் சான்றிதழ் இணைக்க வேண்டும்-இவ்வளவே நிபந்தனைகள்!

வேண்டும்-இவ்வளவே நிபந்தனைகள்!

மேற்கண்டோர் தட்டச்சு கற்க விரும்பினால் திங்களுக்கு ரூ 150 வீதம் உதவி கிடைக்கும். சுருக்கெழுத்துப் பயிலவோ, திங்கள் ஒன்றுக்கு ரூ 220 வீதம் பன்னிரண்டு திங்களுக்கு உதவி உண்டு. ஏழை விதவை, தையல் இயந்திரம் அன்பளிப்பாகப் பெறலாம். விதவையின் குழந்தைகளுக்குப் பாடநூல்கள் வழங்கவும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

விதவை ஒருத்தியின் மகளுக்குத் திருமணமா? அரசு உதவி செய்ய முந்துகின்றது. ரூ. 1000 வரை உதவி செய்யும். அக்குடும்பத்தில் சம்பாதிக்கும் ஆண்மகன் இல்லை - மணமகளுக்கு வயது 18-க்கு மேல் - ஒரு பெண்ணுக்கு மட்டும் என்ற நிலையில் உதவி உண்டு.

விதவைகள்- அதிலும் இளம் விதவைகள்- வேரில் பழுத்த பலா!- வாழ்நாளெல்லாம் கைம்பெண் என்ற கசப்புடன் வாழ வேண்டுமா? மறுமலர்ச்சி ஏற்பட்டு அவள் மறுமணம் செய்தால், ஊரார் பழிக்கலாம். உற்றார் இகழலாம். அரசோ ரூ. 5000 வரை உதவும். சில நிபந்தனைகள் உண்டு. கணவனாக அமைபவருக்கு அது முதல் மணமாக இருக்க வேண்டும். உதவித் தொகை பணமாகத் தரப்படாது. சேமிப்புப் பத்திரங்களாகவே வழங்கப்படும்.

அனாதைப் பெண்களுக்கும், வாழ்வில் திருப்பம் ஏற்பட உதவி உண்டு. ஆதரவற்ற பெண்களுக்கான விடுதியில் தங்காது வெளியே தங்கும் அனாதைப் பெண்களுக்குப் பண உதவியாக அரசு ரூ. 1000 வரை வழங்கும். வயது 18-30 என்ற வரம்பில் இருக்க வேண்டும்.

பார்வையற்றோர் ஒருவரைச் சாதாரணப் பெண் மணந்தால் அதற்கும் அரசு மனமுவந்து உதவும். 8 கிராம் எடையில் தங்கப் பதக்கமும், சேமிப்புப் பத்திர வடிவில் ரூ. 4000-உம் வழங்கும்.

ஊனமுற்றவர்களுக்குச் செயற்கை உறுப்பு வழங்கல், சைக்கிள் வழங்கல், உருள் நாற்காலி வழங்கல், காது கேளாதவருக்குக் காது கருவி வழங்கல், மன வளர்ச்சியற்ற குழந்தைகளுக்குப் பள்ளிகள் நடத்தல்-கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்ட மருந்து தரல்-மகப்பேறு உதவி தரல், தருமாம்பாள்



நினைவுத் திட்டம், மூவலூர் இராமாமிருதம் அம்மையார் திருமண உதவித் திட்டம்- என்று கற்பனைக்கு எட்டாத வகைகளில் இன்று பெண்கள், குழந்தைகள், ஊனமுற்றவர்கள் முதலியோருக்கு உரிய திட்டங்கள் ஏராளம்.

ஆயின், இத்திட்டங்கள் உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களையே அடைய வேண்டும் என்பதற்காக வரைமுறைகள் உள்ளன. வருமான வரம்பு, வயது வரம்பு, கல்வித்தகுதி முதலியன உண்டு. இவற்றை மெய்ப்பிக்கத் தக்க சான்றிதழ்கள் தக்க அலுவலர்கள் வழங்கியதாக இருக்க வேண்டும்.

இளம் விதவை என்றால் கணவன் இறந்துபட்டமை பற்றி ஆவணம் தேவை. விதவையின் பிள்ளைகளுக்குப் பாடநூல்கள் தேவை எனின் அவர்கள் படிக்கும் பள்ளிகளின் தலைமையாசிரியர் வழங்கிய பள்ளிச் சான்று தேவை. உடல் ஊனம் என்றால் உடலூன மருத்துவர் தரும் மருத்துவச் சான்று வேண்டாமோ? நிபந்தனைகள் எளியவை! பொய்யாக விண்ணப்பித்தவர்களுக்கு உதவி கிடைக்காத வண்ணம் சில விதிகள் உள்ளன. அவ்வளவே!

அரசின் துறை பலவற்றுள்ளும் சிக்கன நடவடிக்கையாக ஒதுக்கீட்டுத் தொகை பொதுவாகக் குறைக்கப்படும். ஆயின் சமூக நலத்துறையின் செலவினங்களுககு அரசு வரம்பு கட்டவில்லை! ஏழை எளியவர்களின் மேம்பாட்டுக்காக எவ்வளவு செலவானாலும் நன்றே என்று சீரிய நோக்கில் திட்டங்களை அமைத்துத் தாராளமாக நிதி ஒதுக்கி வருகிறது.

நிதிப் பற்றாக்குறை என்ற பேச்சுக்கே இத்துறையில் இடமில்லை! பட்டம் பெற்றவர்கள் -தமிழில் பட்டம் பெற்றவர்கள் தாங்களும் எளிய மக்களின் மேம்பாட்டுக்காக முறையான விண்ணப்பங்கள் ஆயத்தஞ் செய்யலாம். "யாதும் ஊரே! யாவரும் கேளிர்" என்பது நடைமுறைக்கு வர வேண்டும். அவர்கள் சார்பாகக் கடிதங்கள் எழுதிப் பாதிக்கப்பட்டவர்களின் கையொப்பம் பெற்றுச் சமுதாய நலத்துறைக்கு அனுப்ப வேண்டும். படித்த இளைஞர்கள் வீறுடன் செயல்பட்டால், ஒட்டுண்ணிகளாகச் சமுதாயத்தைச் சுரண்டி வாழும் இடைத்தரகர்கள் ஒதுங்கத்தான் வேண்டும். சுரண்டல்

களத்தை விட்டு ஓடத்தான் வேண்டும். இவ்வகையில் மொழிப்பயன்பாடு மிக அருமையாக உங்களை இயக்க வேண்டும்.

ஏழை எளிய மக்கள் அரசுக்கு அல்லது துறைத் தலைவருக்கு அல்லது மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பலாகும் மனுக்கள் சில எவ்வாறு அமைய வேண்டும்?

மாதிரிக்குச் சில கடிதங்களைப் பார்க்கலாமே!

மாதிரிக் கடிதம் - 1

விடுநர்:
சே. கண்ணம்மாள்,
3, நடுத்தெரு,
கண்டாச்சிபுரம்,
வள்ளலார் மாவட்டம்.

பெறுநர்:
மாவட்ட சமூகநல அலுவலர் அவர்கள்,
வள்ளலார் மாவட்டம்,
விழுப்புரம்.

ஐயா,

வணக்கம்.

நான் கண்டாச்சிபுரத்தைச் சேர்ந்தவன், இப்போது என் வயது 26. என் பிறந்த தேதி 3-9-1966. எனக்கு 19 வயதாகும் போது திருமணமாயிற்று. மணமகன், உள்ளூர்க்காரர். அரசமரத் தெரு நாராயணன் என்பது அவரது பெயராகும். அவர் 17-12-87 அன்று காலமானார்.

என் எதிர்காலப் பாதுகாப்பையும் வாழ்க்கையையும் உறுதிப் படுத்திக் கொள்ள மறுமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். என்னை விழுப்புரம் நகராட்சியில் இரவுக் காவலராகப் பணிசெய்யும் தி.கோவிந்தராசன் என்பவர் மறுமணம் செய்து கொள்ள விரும்புகிறார். அவருக்கு இப்போதுதான் திருமணம் நடக்க வேண்டும். (காண்க: அவருடைய உறுதிமொழி)



வருகின்ற 26-5-1992 அன்று எங்கள் திருமணம் விழுப்புரம் மாரியம்மன் கோயில் வளாகத்துள் நடைபெற உள்ளது. அன்றே இம்மணத்தைப் பதிவு செய்ய உள்ளோம்.

இத்திருமணத்திற்காக, அரசு வழங்கும் நன்கொடையான ரூ 5000-ஐச் சேமிப்புப் பத்திரங்களாக வழங்க ஆவன செய்ய வேண்டுகிறேன். திருமணம் முடிந்ததும், உரிய ஆவணங்களை பணிந்தனுப்ப இயலும். முன்கூட்டியே தகவலைத் தங்களுக்கு அனுப்ப விரும்பியே இம்மனுவைத் தருகிறேன்.

நன்றி!

விழுப்புரம் — தங்கள் உண்மையுள்ள,
10-5-1992 — சே. கண்ணம்மாள்

இணைப்பு:
1) என் பிறந்த நாள் சான்று.
2) என் முதல் திருமண அழைப்பிதழ்.
3) என் முதல் கணவர் இறந்தமை பற்றிய சான்று.
4) என் வருங்காலக் கணவரின் உறுதி மொழியும் அலுவலகச் சான்றும்.

மாதிரிக் கடிதம் - 2

விடுநர்:
க. தி. அருக்காணி,
க.பெ. திருநாவுக்கரசு,
சென்னைச் சாலை,
திருவெண்ணெய் நல்லூர்.

பெறுநர்:
மாவட்ட சமுதாயத்துறை அலுவலர் அவர்கள,
தென்னாற்காடு மாவட்டம்,
கடலூர்-1.

அன்பிற்குரிய அம்மையீர்,

நான், திருவெண்ணெய் நல்லூரில் குடியிருப்பவள். என் கணவர் திருநாவுக்கரசு கூலிவேலை செய்பவர். எங்களுக்கு கடந்த 14-9-91 அன்று திருமணம் நடைபெற்றது. நான் இப்போது இரண்டு மாதங்களாகக் கருவுற்றுள்ளேன் என்பதை அறிந்தேன். இதுவே என் முதல் மகப்பேறு ஆகும்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்திட்டத்தின் f8;vdfF ரு 300 வழங்கியுதவ வேண்டுகிறேன். உரிய மருத்துவச் சான்றுகள் இணைத்துள்ளேன்.

நன்றி!

இங்கனம்
க. தி. அருக்காணி

திருவெண்ணெய் நல்லூர்
3-4-92

இணைப்பு:
1) கருவுற்றுள்ளமைக்குரிய மருத்துவச் சான்று.
2) வருமானச் சான்று.

## மாதிரிக் கடிதம் - 3

விடுநர்:
உ. மாணிக்கம்மாள்,
த-பெ. முருகன்,
31, கட்டபொம்மன் சாலை,
மதுராந்தகம்.

பெறுநர்:
மாவட்ட சமுதாய அலுவலர் அவர்கள்,
செங்கை எம். ஜி. ஆர். மாவட்டம்,
காஞ்சிபுரம்-2.

அன்பிற்குரிய ஐயா,

வணக்கம். நான் 1969-இல் உலகநாத மேஸ்திரி என்பாருக்கு வாழ்க்கைப்பட்டு, 1-7-1980 அன்று கணவனை இழந்தவள். எனக்கு ஒரு பெண் மட்டும் இருக்கிறாள் எனக்குப் படிப்பறிவு இல்லை. நாற்று நட்டும், களை பறித்தும், வீட்டு வேலைகள் செய்தும் குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறேன். என்னுடைய மாத வருமானம் மிகவும் குறைவு. ஆண்டு ஒன்றுக்கு ரு 2500 அளவுக்கும் இல்லை. வீட்டில் ஆண்கள் யாரும் இல்லை.

என் மகள் பூங்காவனம் 19-9-1971 அன்று பிறந்தவள். மதுராந்தகம் உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு வரை படித்தவள். அவளுக்கு 24-6-1992 அன்று திருவள்ளூரில் திருமணம் நடக்க உள்ளது. மணமகன் என் நாத்தனார் மகன். மிகவும் படாதபாடுபட்டும் மிக எளிய முறையிலேயே திருமணம்



நடத்த இயலும். விதவைத்தாய் மகளுக்கு என்னதான் செய்துவிட முடியும்?

மூவாளூர் இராமாமிருதம் அம்மையார் நினைவுத்திட்டத்தின் கீழ்விதவைகளின் பெண்களுக்குத் திருமண உதவியைத் தாங்கள் புரிவதாக அறிந்தேன். அன்பு கூர்ந்து என் மகளின் திருமணத்துக்கு இவ்வுதவி நிதி அளிக்குமாறு வேண்டுகிறேன்.

இங்கனம்
தங்கள் உண்மையுள்ள
உ. மாணிக்கம்மாள்

இணைப்பு:
1) என் கணவர் இறந்து போனமைக்குச் சான்று.
2) என் மகளின் வயது-கல்வி பற்றிய சான்று.
3) திருமண அழைப்பிதழ்.

## 4. உடல் ஊனமுற்றோர் கடிதம்

விடுநர்:
க. கோபாலன்,
த. பெ. கண்ணப்பர்,
174, பெரியதெரு, காஞ்சிபுரம்.

பெறுநர்:
மாவட்ட சமுதாய அலுவலர்,
செங்கை எம். ஜி. ஆர். மாவட்டம்,
காஞ்சிபுரம்.

ஐயா,

பொருள்: உடல் ஊனமுற்றவர்-கால்கள் முடம்-சுருக்கெழுத்தும் தட்டச்சும் கற்க உதவி நாடல்.

நான் 18 வயதானவன். இளம்பிள்ளைவாத நோயால் இளம் வயதிலேயே இரண்டு கால்களும் பாதிக்கப்பட்டவன். ஆயினும் படாதபாடு பட்டுப் பள்ளிப் படிப்பை இந்த ஆண்டு முடித்தேன். மேற்கொண்டு கல்லூரியில் படிக்க எனக்கு விருப்பமில்லை. நான் என்னுடைய எதிர்கால வாழ்க்கைக்காகத் தட்டச்சுத் துறை-சுருக்கெழுத்துத் துறை ஆகியவற்றையே தேர்ந்தெடுக்க விரும்புகிறேன்.

என் தந்தையாருக்கு ஆண்டு வருமானம் ரூ.4800- ஆகும். நான் பள்ளியிறுதித் தேர்வில் 62 சதவிகிதம் மதிப்பெண் பெற்றுள்ளேன்.

எனவே தங்கள் துறை மூலம் நான் சுருக்கெழுத்தைக் கற்பதற்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ 220 வீதம் பன்னிரண்டு திங்களுக்கு உதவி நிதி வழங்க வேண்டுகிறேன்.

நன்றி!

| | |
|---|---|
| காஞ்சிபுரம்-3 | தங்கள் உண்மையுள்ள |
| 12-1-1992 | க. கோபாலன் |

இணைப்பு:

1) பள்ளியிறுதி வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்.
2) பிறந்த தேதி பற்றிய சான்றிதழ்
3) என் தந்தையாரின் வருமானச் சான்றிதழ்
4) என் உடலூனம் பற்றிய மருத்துவச் சான்றிதழ்
5) உடல் ஊனமுற்றுள்ளதைக் காட்டும் புகைப்படம்

## கடிதங்களுக்கு வரையறை இல்லை

எத்தனை வகை மக்கள் உள்ளனரோ, அத்தனை வகைக் குறைகள் உள்ளன. சமூக நலத்துறை மூலம் பெறத்தக்க சலுகைகளை அடைவதற்குரிய உதவிகளை நீவீர் செய்ய வேண்டும்; எளியோர் எழுதவும் படிக்கவும் அறியாதவர்கள்; எனவே சிரமம் பாராது முன்னின்று அவர்களின் பொருட்டுக் கடிதங்கள் எழுதித் தர வேண்டும். பாமர மக்களுக்கு உதவுகின்ற பணி, மிகச் சிறந்த சமுதாயப் பணி என்பதை நினைவில் கொண்டு செயற்படவேண்டும்.

மேலே குறிப்பிட்ட குறைபாடுகள் காரணமாகத்தான் அரசு உதவி கிட்டும் என்று வாளா இருந்து விடக் கூடாது. அரசின் திட்டங்களால் தீர்க்கவியலாத- திட்டங்களில் இடம்பெறாத- புதுப்புதுச் சிக்கல்களையும் சமூக நலத் துறைக்குத் தெரிவிக்கலாம். இத்தகு சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தற்போது வாய்ப்பும் வசதியும் பண ஒதுக்கீடும் இல்லாமல் இருக்கலாம். மாவட்ட அளவிலான அலுவலகங்கள், புதுப் பிரச்சினைகளைத் தீர்க்க இயலாமல் போகலாம். ஆனால் மாநில அளவிலான தலைமை அலுவலகத்திற்கு இத்தகு கடிதங்கள் அனுப்பப் பெற்றால், அக்கடிதங்கள் குப்பைக் கூடங்களுக்குச் செல்ல மாட்டா! மாறாக அத்துறை போராட வேண்டிய சிக்கல்களின் ஒன்று என்று கருதப்பட்டுப் புதிதாகப் பட்டியலில் சேர்க்கப்படும். தலைமை அலுவலகம் கவனிக்காவிடிலும்,



துறை அமைச்சர்களின் பார்வைக்குக் கடிதம் அனுப்பலாம். மாநில முதலமைச்சரின் பார்வைக்கும் மனுக்கள் அனுப்பலாம்.

நம் கண்முன் எளிய மக்கள் படுகின்ற தொல்லைகளைப் போக்கவும், குறைக்கவும், தணிக்கவும் தமிழ்ப் பட்டதாரிகள் முன்வர வேண்டும். அவ்வாறு செய்ய நமக்கு அதிகாரம் இல்லை என்று ஒதுங்க வேண்டாம். ஆராய்ச்சி மணியின் நாவாகப் பணி செய்யலாமே! இயன்றவரை உதவலாமே! நீங்கள் கற்ற தமிழ்க் கல்வியின் மொழிப்பயனை, சமூக நன்மைக்காகவும், ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதற்காகவும், உங்கள் ஊர் நன்மைக்காகவும் மடைமாற்றிடலாமே!